# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 14 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11

## தற்காலக் கவிதைகள்

1. "புழுதிப் படுக்கையில் புதைந்த…." எனும் கவிதையின் ஆசிரியர் யார்?

2. இக் கவிதையை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

3. எந்த ஆங்கில கவிதை இக்கவிதையாக மாற்றப்பட்டது.

4..**பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை பரிந்தவர்**
**நினைவு நாள் பகருவார் இல்லை..**
அ. இங்கு பரிந்தவர் என்பதன் உணர்த்தும் இருவகை கருத்துக்கள்?
ஆ. இவ்வடிகளில் புலப்படும் உணர்வு யாது?
இ. பழுநிலா என்பது யாது?

5. **அப் புதை மேட்டிலோர் கானகப் பூவைப் பறித்துப்**
**போடுவாரில்லையே..**
அ. கானகப் பூஎன்பது குறிக்கும் பொருள்?
ஆ. புதைமேடு எனப்படுவது யாது?

6. **புழுதிப் படுக்கையில் புதைந்த எம் மக்களை போற்றும்**
**இரங்கல் புகழ் மொழி..**
அ.இங்கு எம் மக்கள் என விளிக்கப்படுவர்கள் யாவர்?
ஆ. இரங்கல் புகழ் மொழி என்பது உணர்த்தும் பொருள்?

7. **..வெட்கம் தனை மறைக்கத்தானோ அவ் இறைவனும்**
**தளிர் பசும் புல்லால் தரை மறைத்தனனோ**
அ. இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

8.. **பூமரத்தின் இலைகளிலே வண்டினங்கள் மோதி**
**புதுமலர்கள்கோதி நறுமது அருந்தியாடும்..**
அ. இவ்வடிகளில் எத்தகு காட்சி வெளிப்படுகின்றது?
ஆ. நறுமது என்பதன் கருத்து யாது?

9. **குன்றெனவே நிமிர்ந்தோங்கி குதூகளிக்கும் தோள்கள் குணக்குன்றாய்..**
அ. குன்றெனவே நிமிர்ந்தோங்கிய தோள் யாருடையவை?
ஆ. குணக்குன்று என்பதில் புலப்படும் அணி யாது?

10. **பனிக்கூட்டம் விரட்டி வரும் பகலவனின் வீரம்**
**பசிக்கூட்டம் விரட்டி வரும் மாண்பு மிகு ஈரம்..**
அ. பனிக்கூட்டம் விரட்டி வருபவன் யார்?
சூரியன்
ஆ. பசிக்கூட்டம் விரட்டி வருபவன் யார்?
உழவன்

11. **நிர்மலமாம் வானில் நிறைமதி தன் துணைவியர்கள் சூழ வரும் கோலம்..**
அ.இங்கு களங்கம் இன்மையை உணர்த்தும் சொல் யாது?
ஆ. துணைவியர்கள் என விளிக்கப்படுவன?

12. **முந்தானைச் சேலை கட்டும் செந்தாழம் பூக்கள்**
அ.இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
ஆ. செந்தாழம் பூக்களாக குறிப்பிடப்படுவோர் யாவர்?

13. சீறி ஓடாத வருங்கால மனித நதி எனும் கவிதையின் ஆசிரியர் யார்? இக் கவிதை இடம் பெற்றுள்ள கவிதைத் தொகுப்பு யாது?

14. **மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய பயிர் முளைத்த பருவம்..**
அ. இவ்வடிகளில் யாருடைய நிலையானது காட்டப்படுகின்றது?
ஆ. பயிர் முளைத்த பருவம் எனும் அடிகள் உணர்த்த விளைவது ?
இ. இங்கு பயிர் என்பது யாது?

15. **அந்த நதி வரும் நாளில் சீறி ஒலியெழுப்பி ஓடாது**
**உறையும் சிறு துளியாய்..**
அ. அந்த நதி என கவிஞர் யாரைக் கூறுகின்றார்?
ஆ. எழுதத் தெரியாத இளைஞனின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

16. தேயிலைத்தோட்டத்திலே எனும் கவிதையில் தோட்டத் தொழிலாளர் அவலம் கடின உழைப்பு பற்றி எடுத்துரைகக்க.

17. இக் கவிதையிலே, தோட்டத் தொழிலாளர் தியாகம் மதிக்கப்படாத தன்மை பற்றி கவிஞரின் இரக்கம் வெளிப்படும் விதம் பற்றி எடுத்துரைக்குக.

18. "குழந்தை என எனது மனம் குதுர்கலிககும்" எனும் கவிதையில், இயற்கையின் வர்ணிப்பு (இயற்கை எழில்) பற்றி எடுத்துக் காட்டுக?

19. இக் கவிதையில், அணிகளின் வெளிப்பாடு பற்றி தெளிவுறுத்துக?

20. "குழந்தை என எனது மனம் குதுர்கலிககும்" எனும் கவிதையில் வெளிப்படும் வாழ்க்கைக்கு உகந்த விழுமியங்கள் யாவை?

21. சீறி ஓடாத வருங்கால மனித நதி எனும் எழுத்தறிவின்மையால் ஏற்படும் அவலம் கவிதையில் எவ்வாறு காட்டப்படுகின்றது?

22. இளைஞனின் அழகு/தோற்றம் மற்றும் அவனைப் பற்றிய வர்ணிப்பினையும் எடுத்துரைக்க?

23. எழுத்தறிவில்லாத இளைஞனுக்காக வருததப்படும் கவிஞரின் மனநிலை பற்றி தெளிவுறுத்துக?